Registered as a NewsPaper

# ஈழநாதம்


மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-03 | 19-08-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-183


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 விநாயகர் வீதி, மயிலிட்டி.
(சி-12429)

# மகளிர் படைப்பிரிவின் வளர்ச்சியில் நான் முழுத்திருப்தி அடைகின்றேன்!



## தேசியத் தலைவர் வே. பிரபாகரன் மகிழ்ச்சி

மகளிர் படைப் பிரிவின் வளர்ச்சியிலே நான் முழுத் திருப்தியை அடைகின்றேன். ஏனென்றால் எவ்வளவோ இக்கட்டான சண்டைக் களங்களில் அவர்கள் எந்தவிதத்திலும் சளைக்காது நின்று போராடி இருக்கின்றார்கள் எனத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கு மகளிர் படையணியின் இருபதாவது ஆண்டு நிறைவையொட்டி நேற்றுவழங்கிய விசேட பேட்டியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் 103 வாக்குகளால் அவசரகாலச்சட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

103 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான யோசனைக்கு ஆளும் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ஆதரவு வழங்கியுள்ளன.

இந்த யோசனைக்கு 124 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் கட்சி இ.தொ. காங்கிரஸ் ஆகியவற்றுடன் ஜே.வி. பி, ஜாதிக ஹெல உறுமய ஆகியனவும் இந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தன.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், மலையக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பெ.சந்திரசேகரன், இராதாகிருஸ்ணன் ஆகியோரும் மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனும் இந்த யோசனைக்கு எதிராக வாக்களித்தனர்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், துரைரட்ணசிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், பத்மநாதன் ஆகியோருடன் அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் ஆகியோர் பாராளுமன்றத்தில் பிரசன்னமாயிருக்கவில்லை

.அவசர காலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்து

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை விசாரணைக்காக அவசரகாலச்சட்டம் அமுலாவதை ஏற்க முடியாது

### பா.உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

கதிர்காமரின் கொலையை அடுத்து அது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவசர காலச்சட்டத்தை அமுல்படுத்துவதென்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்றென தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்ததையடுத்து அதன் உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களிடம் பி.பி.ஸி. தமிழோசை செவ்வி கண்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அந்தச் செவ்வியில் தொடர்ந்து கூறுகையில்,

சமாதான முயற்சிகள் மேற்கொள்வதற்காக, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று இடையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்நேரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தையும் சேர்த்து முழுமை யாக நாடு பூராகவும் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்தமை யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்துவது மட்டுமன்றி தடைப்பட்டிருக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தையைக்கூட மீளக் கட்டி யெழுப்புவதற்கும் அது தடையாக இருக்கும். எனவே, தமிழ் மக்களுக்கு எதிராக மீண்டும் இந்த அவசர காலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக் கிறது.

இதனால், கடந்த காலங்களில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சீனன்குடா முகாமை படமெடுத்தவர் கைது

(கொழும்பு)

சீனன்குடா விமானப்படை முகாமை வீடியோப் படமெடுத்த தமிழர் ஒருவர் நேற்று முன்தினம் விமானப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் புகையிரதத்தில் திருகோணமலைக்குப் பயணம் செய்த போதே இவ்விமானப்படை முகாமை வீடியோப் படமெடுத்தார்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மதுபான விற்பனை நிலையம் மீது வவுனியாவில் கைக்குண்டு வீச்சு

### ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியா நகர மதுபானக் கடையில் நேற்றிரவு 8.40 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் மதுபான விற்பனையாளர் அமரசேகரம் ஜெயநாதராஜ் (வயது - 25) என்பவர் காயங்களிற்குள்ளனார். பெருமளவான

(IV ஆம் பக்கம் பார்க்க)

## யு.நி. உடன்பாட்டில் புதிய நடைமுறைகள்; சிந்திக்க முடியாதவர்களாக உள்ளோம்!

### போராளிகளுக்கு விளைவிக்கும் இடையூறு யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கும் - சு.ப. தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செயற்படுத்துவதுதான் முக்கியமானது. புதிய நடைமுறைகள் தொடர்பாகச் சிந்திக்க முடியாதவர்களாகவுள்ளோம். இதேவேளை யுத்த நிறுத்த உடன்பாட்டில் போராளிகளுக்குள்ள சிறப்புரிமைகளுக்கு இடையூறுகள் விளைவித்தால் யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவது சிரமமாகிவிடும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தலைமையிலான குழுவினரைச் சந்தித்த பின் ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரி வித்தார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

M.S Office, Desktop Publishing (D.T.P), Hardware 20.08.2005 சனிக்கிழமை K.S.K கணினி நிலையம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம். பிரிவு I மாலை 2.00 மணிக்கு, பிரிவு II இரவு 7.00 மணிக்கு. அனுமதிக்கட்டணங்கள் இலவசம். பயிற்சி முடிவில் அரச, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். நிர்வாகம். (6602)

### கணனிச்சேவை

கணனி தட்டச்சு, ரென்சில் கட்டிங், றோனியோ, cd ரைற்றிங், போட்டோ கிரபிக்ஸ், டிஜிற்றல் அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், பதிப்பக வேலைகள், டிஜிற்றல் இயந்திரம் மூலம் போட்டோ கொப்பி போன்ற வேலைகளை ஒரே இடத்தில் விரைவாகச் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை, டிப்போறோட், கிளிநொச்சி. (6541)

# அறிவித்தல்

## மணல் அனுமதி

கரைச்சிப் பிரதேசசபைப்பிரிவிற்குள் உடனடியாகச் செயற்படும் விதத்தில் மணல், கற்கள்,கிறவல் ஆகியவற்றினை அகழ்வதற்கும், கொண்டு செல்வதற்கும் பிரதேசசபையின் அனுமதி தவறாது பெற்றுக்கொள்ளவேண்டும். அனுமதி பெறுவும் பெறாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படு மென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அளவுக்கதிகமாக மணல், கற்கள், கிறவல்களை அகழ்வது இயற்கை வளத்தினைப் பாதிக்கின்றது.

பொன். நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12557)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (Business English)-2005

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் BAd/B.Com மாணவர்களில் அனைத்து பாட அலகுகளிலும் சித்திபெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் (Business English) மாத்திரம் சித்தியின்மையால் பட்டக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ள மாணவர்களுக்காக இரண்டாம் மொழி ஆங்கிலப்பாடத்திற்கான (Business English) விசேட மீள்பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் 22.08.2005 ஆம் திகதி முதல் 02.09.2005 ஆம் திகதிவரை பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள் ளப்படும்.

* முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
* இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (பகுதி-I)
* மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (பகுதி-II)

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு (பழைய/ புதிய பாடத்திட்டம்) ரூபா 50/= வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை முகாமைத்துக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி.12569) பதிவாளர்

## கட்டடங்களுக்கான அனுமதி

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குள் (கரைச்ச கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உட்பட) புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள், கிணறுகள், மதில்கள், குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கும் பாரிய குழிகள் தோண்டுவதற்கும் கரைச்சிப் பிரதேசசபையின் அனுமதியை தவறாது பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி பெறாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன்.நித்தியானந்தன்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.12558)

## குடும்பஸ்தர் பரிதாப மரணம்

(புதுக்குடியிப்பு)

புதுக்குடியிருப்பில் மரத்தால் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு முல்லை வீதியிலுள்ள குழந்தையேசு ஆலயவளவினுள் நின்ற மரத்தில் மின்சார விநியோகத்திற்காக அதன் கிளைகளை வெட்டியபோது அறுபது அடி உயரத்தில் இருந்து புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான வ.பாதராசா (வயது-40) என்பவர் தவறிவீழ்ந்து படுகாயமடைந்தார். இவரை உடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று ஆரம்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஆபத்தான நிலையில் யாழ்.போதனாவைத்தியாசாலைக்குக் கொண்டு செல்லும் போது தர்மபுரம் பகுதியில் மரணம் அடைந்தார். (08)

## மோசமான நிலையில் முள்ளியவளை நகர வீதி

முள்ளியவளை பகுதி பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

முள்ளியவளை மின்வழங்கல் சேவை நிலையம் தொடக்கம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வரையான வீதியோரம் மழை வெள்ளத்தால் அரித்து ஆபத்தான ஆழமான வடிகாலாகக் காட்சியளிக்கின்றது. இதனால் வாகனங்கள் போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை காணப்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன. அத்துடன் வித்தியானந்தாக் கல்லூரி முன்பாகவுள்ள மதகு பாரிய அறுத்தோடிக்கிடங்காகவும் அதற்கு வைக்கப்பட்ட மணல்பெரலிகள் பொறிந்து வீழ்ந்தும் உள்ளன. (ஆ)

# சாவு அறிவித்தல்

## முருகேசு கனகம்மா

யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.141 இராசாவின் தோட்டவீதி-நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கனகம்மா அவர்கள் 17.08.2005 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் நாகநாதர் முருகேசு (ஸ்ரீமுருகன் அரிசியாலை உரிமையாளர்) வின் அன்பு மனைவியும், கனகலிங்கம் (பிரான்ஸ்), இராசலிங்கம் (அமரர்), பாலசுந்தரம் (கனடா), தயாநிதி(வட்டக்கச்சி),கலாநிதி (லண்டன்), சத்தியலிங்கம் (இந்தியா), தர்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனலக்சுமி (பிரான்ஸ்), மேரிஜெசிந்தா (மட்டக்களப்பு), சிவப்பிரகாசம் (சிவசோதி பல்பொருள் வாணிபம்-வட்டக்கச்சி), லோகநாதன்(லண்டன்), நீவிதா (ஜேர்மனி), ஆகியோரின் மாமியாரும், லக்ஸ்சபிரியா,ஜெயந்தி, வசந்தி, ராஜி, பிரதீபன் (பல்கலைக்கழகம்-மட்டக்களப்பு), சகிலா, ஜெயதீபன் (பிரதம கணக்காளர் பல்துறை-பொறியியல் நிறுவனம்), லக்சன் ஆகியோரின் பேத்தியுமாவார்.அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.08.2005 (இன்று) 378 திருநாவற் குளம்-வவுனியாவில் உள்ள கணபதிப்பிள்ளை பரமானந்தம் என்பவரின் இல்லத்தில் நடைபெற்று,தகனக்கிரியைகள் பிற்பகல் 2 மணியளவில் தட்சனாங்குளம் பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவசோதி பல்பொருள் வாணிபம்,
சந்தையடி-வட்டக்கச்சி.
(சி.12611)

தகவல்:-
சு.சிவப்பிரகாசம்
(மருமகன்)

## (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களின் வேண்டுகையின் பேரில்

வடக்கு கிழக்கு மாகாண பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தால் அமைக்கப்பட்ட

# கணினிப் புல வலுவூட்டல் அலகு திறப்பு விழா

காலம்:- 19.08.2005 (இன்று)

நேரம்:- பி.ப 4.30 மணி

அனைவரையும் தவறாது இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்.

(சி-12566)

## மருதம் வாணிபம் நடாத்தும்

# இயலவிற்பனை

காலம் - 2005.08.21

இடம்:- புதுக்குடியிருப்பு சந்தி அருகாமை, புதுக்குடியிருப்பு

பொருள் விரிப்பு:-
- இலத்திரனியல் பொருள்கள்
- ஈருருளிகள்
- அழகுசாதனப் பொருள்கள்
- புடைவைகள்

2005.08.19-20 ஆம் நாள்வரை

இயலவிற்பனை நிலையத்தில் பொருள்களைப் பார்வையிடமுடியும்.

கவனிப்புக்கு: இயலவிற்பனை நாளன்று நுழைவுக்கட்டணமாக உரூபா 50.00 அறவிடப்படும்.

(சி.12568)

# சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ள நாட்டில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்

## - ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

**இலங்கையில் சனாதியின் தலைமையிலான அரசாங்கம் சிறுபான்மைக் பலத்தைக்கொண்டு ஆட்சியை முன்கொண்டு செல்ல முடியாதுள்ளது.நாட்டில் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ள தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**

புதுடில்லியில் தினேஸ் சிங் ஞாபகார்த்த உரையை ஆற்றிய அவர்,மேலும் தெரிவிக்கையில்: நாட்டின் சனாதிபதி தமது இரண்டாவது பதவிக் காலத்தை விரைவில் நிறைவுசெய்யவுள்ளார். அதேநேரம் பாராளுமன்றமும் தனிக்கட்சி பெரும்பான் மையைக் கொண்டிருக்கவில்லை.இந்த நிலையில் அந்த அரசாங்கத்தினால் சமாதான முன்னெடுப்பை உரிய வகையில் முன்னெடுத்துச்செல்ல முடியாது.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் நேரடியான கருத்துக்களைத் தெரிவிக்காத அவர் அனைத்துத் தரப்பினரும் கொலைகளை நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் இறுதி சமாதானமானது அனைத்து சமூகங்களினதும் உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம் சிறுபான்மையினரின் மனித உரிமைகள் சனநாயக வழிமுறைகள் காக்கப்படும் வகையில் அமையவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.இந்தியாவில் இனப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட முறைகளை இலங்கை உதாரணங்களாகக் கொண்டு செயற்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியா சனநாயக விழுமியங்களைக் கொண்டுள்ள நாடு என்ற வகையில் அதன் நடவடிக்கைகள் இலங்கைக்கு பெரிதும் உதவக்கூடியன.

எனவே இலங்கையின் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உதவ வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

# முத்தலிப் கொலைச் சந்தேக நபர்கள் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

துவான் முத்தலிப் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளனர்

நேற்று முன்தினம் இவர்கள் ஹொரணை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.மூன்று சந்தேகநபர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்தும், செந்தில்குமார் மற்றும் சரஸ்வதி ஆகியோர் களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்தும் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

# சட்டவிரோத கடவுச் சீட்டு தயாரித்த குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் மூவர் கைது

சட்டவிரோதமாக கடவுச்சீட்டுக்களைத் தயாரித்த கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்ட இருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாத் தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்ற இருவரும் யாழ்ப்பாணம்,கல்முனை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இந்தக் கைதையடுத்து விமான நிலையத்தில் உள்ள குடிவரவு குடியகல்வு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து போலி இறப்பர் முத்திரையொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மேலும் இரு அதிகாரிகளைக் கைது செய்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கதிர்காமர் கொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒரு நாள் விவாதம்

## - கட்சித்தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒரு நாள் விவாதமொன்றை நடத்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச முன்வைத்த யோசனையை ஏற்றுக் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இந்த விவாதம் நடைபெறும் தினம் அடுத்த கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர்பாக கட்சித்தலைவர்கள் கருத்துத் தெரிவித்தால் மாத்திரம் போதாதா என சபை முதல்வர் கேட்டதற்கு அது போதுமானதல்ல என்றும், விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலை குறித்து விவாதம் ஒன்று நடத்தப் படவேண்டும் என ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத் தலைவர் அத்துரலியே ரத்ன தேரரும் கேட்டுள்ளார்.

# இராணுவத்தால் கைது செய்யப்பட்ட கணவனை விடுவிக்க உதவுக

## -சகாயநாதனின் மனைவி கோரிக்கை

கடந்த மாதம் மன்னாரில் வைத்த கிளைமோர் குண்டுகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தமது கணவரை விடுவித்துத்தருமாறு மன்னார் பிரஜைகள் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது கணவரான சகாயநாதன் என்பவர் முச்சக்கர வண்டியை செலுத்துகின்றவர். அவருக்கு நாள் ஒன்றுக்கு 300 ரூபா வரையில் கிடைத்து வந்தது.

இந்த நிலையில் அவர் சம்பவம் தொடர்பில் எவ்வித தொடர்புகள் இன்றியே கைது செய்யப்பட்டுள்ளார்.

எனவே தற்சமயம் அநுராதபுர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரை விடுவிக்கும் வகையில் இலவச சட்ட உதவிகளைப் பெற்றுத்தருமாறு குறித்த சந்தேக நபரின் மனைவி பிரஜைகள் குழுவிடம் கோரியுள்ளார்.

# த.பு.கழக அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்த படையினர் அடாவடி

யாழ். சாவகச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்திற்கு அனுமதியின்றி அத்துமீறி உள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் அலுவலகத் தளபாடங்களைச் சேதப்படுத்தியதுடன், அங்கிருந்த ஆவணங்களையும், கோப்புக்களையும் குலைத்துச் சிந்தியுள்ளனர்.

படையினரின் இந்த அடாவடித் தனத்தால் அலுவலக செயற பாடுகளுக்கு தடையேற்பட்டதுடன், மக்கள் தமது தொடர்புகளை அலுவலகத்துடன் பேணமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (33,27)

# இரு இளைஞர் கைது

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் போலி அடையாள அட்டையுடன் ஓமந்தைச் சோதனைச் சாவடியினூடாக இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் நுழைய முயன்ற இரு இளைஞர்கள் கடமையில் நின்ற இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஓமந்தைப் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

தயாபரன் இல 58, வளம்நகர், மல்லாவி, கந்தையா கதிர் இல 508 யோகபுரம் மல்லாவி ஆகிய இரு இளைஞர்களும் (NPGN 4160, NPHH1835) என்றஉந்துருளிகளுடன், நாகேந்திரன் பகீதரன் கரும்புள்ளியான், நட்டாங்கண்டல் (753153580V), இராமநாதன் புலேந்திரதாசன் இரண்டாம் ஒழுங்கை நெடுந்தீவு தெற்கு, யாழ்ப்பாணம் ஆகிய அடையாள அட்டைகளுடன் கைது செய்யப்பட்டு ஓமந்தைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# போராளி கைது குறித்து முறைப்பாடு கிடைத்தது

## - போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர்

விடுதலைப்புலிகள் உறுப்பினர் யாழ்ப்பாணத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டது குறித்த முறைப்பாட்டைப் பெற்றுள்ளோம். நாம் இதை சாதாரண நிலமைக்குக் கொண்டுவருவோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப்ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சியில் அரசியல்துறைப்பொறுப்பாளருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**கேள்வி:-** யாழ்.இல் படையினரால் கைதுசெய்யப்பட்ட போராளி விடுவிக்கப்படுவாரா?

**பதில்:-** நான் அதைச்சொல்ல முடியாது. ஏனெனில் நாம் இவ்விடயத்தைத் தனியாகப் பார்க்கிறோம்.

**கேள்வி:-** விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டத்தினர் கைதான போராளி விடுவிக்கப் படாவிட்டால் விடுதலைப்புலிகள் கடுமையான நடவடிக்கை எடுக்கும் நிலைக்குத் தள்ளப் படுவர் எனத் தெரிவித்துள்ளனரே

**பதில்:-** நாம் இக்கூற்றைப்பற்றி அறிந்துள்ளோம். அவர்கள் ஏற்கனவே இதுபற்றித் தெரிவித்துவிட்டார்கள்.

**கேள்வி:-** போர்நிறுத்த கண்காணிப்புக்குழு என்ற வகையில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:-** நாம் இவ்விடயத்தை அவதானித்துள்ளோம். சாதாரண நிலமைக்குள் பேண முயற்சி செய்கின்றோம்.

# விசாரணை முடியும்வரை குற்றவாளி இவர்தான் என கூற முடியாது

## -ஐ.தே.கட்சி பா. உறுப்பினர் முஸ்தபா

(கொழும்பு)

கதிர்காமரின் கொலை தொடர்பாக குறிப்பாக, இவர்கள்தான் செய்தார்கள் என்று பொலிஸ் விசாரணை கூறுகின்றவரை நாங்கள் எங்கள் விரல்களை நீட்டி இவர்கள்தான் செய்தார்கள் என்று கூற முடியாது. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா கூறியுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார். அவரிடம் சிறிலங்காவில் கொலைகள் நடைபெறுவதான குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை பற்றி என்ன கருதுகின்றீர்கள் எனக் கேட்டபோது,

கொலைகள் நடைபெறுகின்றன தான் ஆனால் யார் செய்கின்றார்கள் என்பதுதான் தெரியவில்லை. ஏனெனில், ஒரு பக்கம் கருணாவினுடைய பிரிவு இருக்கின்றது. இன்னொரு பக்கம் பொலிஸ் உளவுப் படையினரே கூறும் நிலை ஒன்றும் இருக்கின்றது. இராணுவத்தினருடாக சில அரசியல் கட்சிகள் குழப்பங்களை விளைவிக்கும் நிலையும் திருகோணமலைப் பகுதியில் தெரிகின்றது. எனவே, இந்நிலையில், கதிர்காமரின் கொலையை பொலிஸ் விசாரணை கள் மூலம் இவர்கள்தான் செய்தார்கள் என்று கூறுகின்ற வரைக்கும் நாங்கள் இவர்கள்தான் என்று கூற முடியாது என்ற நிலைப்பாட்டிலே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

# அமைச்சர்களை உளவு பார்த்ததாக ஆறு தமிழர்கள் தெற்கில் கைது

அமைச்சர்களை உளவு பார்த்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெல்கந்த உடாமுல்லையில் இருக்கும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சுசில்பிரேமஜயந்தவின் வீட்டிற்கருகே சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் புதன் கிழமை மிரியான பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் விடுதலைப்புலி உறுப்பினரா என்பது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருவதாக மிரியான தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் கே.சுனில்சாந்த தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் ஏதேனும் குற்றச்செயலுக்காக வந்திருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டிற்கருகே நடமாடி உளவு பார்த்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வர் பம்பலப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இந்நால்வரும் கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் நீண்டகாலமாகத் தங்கியிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இருவர் அமைச்சரின் பாதுகாப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இருவரும் பம்பலப்பிட்டி பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது கைதுசெய்யப்பட்டனர். இந்த நால்வரிடம் இரகசியப்பொலிசாரும், புலனாய்வுப்பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானை படுகொலை செய்வதற்கு உளவு பார்த்தார் என தம்புள்ளையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, கண்டி,நுவரெலியா ஆகிய இடங்களில் உளவுபார்ப்பதற்காக வந்த சந்தேக நபர் நுவரெலியாவில் உள்ள ஆறுமுகம் தொண்டமானின் காரியாலயத்திற்கு வந்து தகவல்களைத் திரட்டிக் கொண்டு அரசகட்டுப்பாடற்ற பிரதேசத்திற்குச் செல்ல முயன்ற வேளை மத்திய மாகாண பொலிஸ் புலனாய்வுப்பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றிற்கு அமைய கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் பன்விலையைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

# சந்தேக நபர்களைத் தடுத்துவைத்து விசாரிக்க அவசரகாலச்சட்டம் தேவை என்கிறார் ரட்ணசிறி

யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் சார்ள்ஸ் விஜவர்த்தன கொலை தொடர்பாக பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவ்வாறான சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு 24 மணித்தியாலங்கள் போதாமையால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கேட்டுக்கொண்டார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்போது அதனை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பாதுகாக்க வேண்டும் என்றும், ஆயுதக் குழுக்களினால் மக்களின் வாழ்வுரிமை பாதிக்கப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின்போது உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன் உரையாற்ற முயன்றவேளை பாராளுமன்றத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

தமது கட்சி அங்கத்தவர்களை அமைதியாக வைத்திருக்கும் பொறுப்புகட்சித்தலைவர்களைச் சார்ந்தது என்று குறிப்பிட்ட சபாநாயகர் லொக்குபண்டார அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டிய நிலையேற்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# மக்களது விருப்புவெறுப்புக்களுக்கு இடமளித்து வீட்டுத்திட்டங்களை அமுற்படுத்துக

-யாழ்.அரச அதிபர் கே.கணேஸ்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் நிறுவனங்களும், அரசஅதிகாரிகளும் மக்களது விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்தே வீட்டுத்திட்ட அமுலாக்கல்களைமேற்கொள்ள முடியுமென்று யாழ்மாவட்ட அரச அதிபர் கேகணேஸ் தெரிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தவர்களுக்கான வீடமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமான கூட்டம் ஒன்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட தொண்டர் அமைப்பு மற்றும் அரச அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் குடியமரவுள்ள இடத்தைத் தெரிவு செய்கின்ற உரிமை உண்டு. இதனடிப்படையில் மக்கள் விரும்பாத இடத்தில் குடியேற்றங்களை அமைப்பது என்பது சாத்தியப்பாடற்றது. இதனால் பலபிரச்சினைகளும் எழ வாய்ப்புண்டு எனவே இதனைக்கவனத்தில் எடுத்தே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்பு நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றார். (33)

## மகளிர்....

மேலும் அவர் தெரிவிக்கையில்; ஆனையிறவுச்சண்டை என்று சொன்னால் தளபதி பால்ராஜ் தான் நினைவிற்கு வருவார். ஏனென்றால் தளபதி பால்ராஜ் ஆனையிறவுச் சண்டையை முன்நின்று நடத்தியதனால் அவர் தான் நினைவிற்கு வருவார்.

ஆனால் உண்மையிலேயே பால்ராஜ் அந்த தரையிறக்கத்திலே போய் இறங்கி அடிபட்டுக்கொண்டிருந்த போது மகளிர் படையணித் தளபதியான துர்க்காவும் அவரோடு அந்தக் களத்திலே, அதே இடத்திலே நின்றார். மாலதி படையணி விதுஷாவும் அந்தக்களத்தில் அவருடனேயே நின்றார்.

பால்ராஜ் உடன் அதேகளத்தில் அதேசூழலில் எந்தவிதமாறுதல்களும் இல்லாமல் அதிலே நின்று பெண் போராளிகளை வைத்து தலைமை தாங்கிப் போராடினார்கள்.எந்த விதத்திலும் அவர்கள் எங்கள் போராட்டத்தில் அந்நியப்பட்டு நிற்கவில்லை. இக்கட்டான, இறுக்கமான கால கட்டங்களில் போராட்டங்களில் பங்குபற்றிக் கொண்டிருந்தார்கள் எனவும் தெரிவித்தார்.

## பாராளுமன்றில்....

கொண்ட போதிலும் அந்த யோசனை மீதான வாக்கெடுப்பில் அதன் உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

## கதிர்காமரின்....

ஏறத்தாழ நாற்பதாண்டு முப்பதாண்டு காலமாக இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஏராளமான மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன. எனவேதான், இந்தச் சட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக எதிர்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் முதலில் கையெழுத்திட்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசுதான். ஆனால், இன்றைய சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவாகவே வாக்களித்துள்ளதே எனக் கேட்டபோது,

இப்படியான சந்தர்ப்பங்களில் இந்தக் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்தே செயற்படுகின்றன. எனவே, இவர்களிடம் இருந்து ஒன்றுமே நாங்கள் எதிர்பார்க்க முடியாது. அடுத்து விரைவில் சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளமையால் இந்த இரண்டு கட்சிகளும் பெரும்பான்மை மக்களைப் பகைத்துக் கொள்ள விரும்பாமையின் காரணமாகத்தான் இவர்கள் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றார்கள் என்றார் ஜோசப் பரராஜசிங்கம்.

# புங்குடுதீவு இளைஞன் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு- ஆமர் வீதியில் கடத்தப்பட்ட புங்குடுதீவு இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் காயங்களுடன் கோமாகம தொடுவவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆமர் வீதியில் வசித்து வந்த சதீஸ்குமார் (வயது-25)என்ற இளைஞர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.00மணியளவில் இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டுப் பின்னர் நேற்று கோமாகம தொடுவவில் புதரிற்குள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலம் கருபோவில வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக் காக வைக்கப்பட்டுள்ளது.

இவரின் கொலைக்கான காரணம் என்ன என்பது பற்றித் தெரியவில்லை என்று சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# வயல்களில் உப்புத்தன்மை தொடர்பாக முல்லையில் மண் ஆய்வு நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் முல்லைத்தீவில் சுனாமியினால் பாதித்த நெல்வயல்களில் உப்புத்தன்மை தொடர்பாக மண் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் வெவ்வேறு உப்புத் தன்மைக்கேற்ப வயல்நிலங்களில் பரிசோதனைத் துண்டங்கள் அமைக்கப்பட்டு அவதானிப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளை விவசாய விளை நிலங்களில் மண் ஆய்வு தொடர்பாக விவசாயிகளிற்குத் தெளிவுபடுத்துவதற்கான சிறப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது கரைச்சிக்குடியிருப்பு வயல் வெளியில் காலை 9.00 மணியளவில் உதவிவிவசாயப் பணிமனையின் பாடவிதான உத்தியோகத்தர் யோகேஸவரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மண்ஆய்வுகள் தொடர்பான கருத்துரைகளை உதவி விவசாயப் பணிப்பாளர், முல்லை.மாவட்ட உதவி கமநல திணைக்கள ஆணையாளர் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து ஆய்வுகளுக்காக விதைக்கப்பட்ட நெற்பயிர்களை விவசாயிகள் பார்வையிட்டதுடன்,அவர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளிற்கும் பதிலளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் பெருமளவான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# வட்டுவாகல் ஆற்றங்கரையில் சாரணர்களுக்கான முன்னோடி "கம்போறி"

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட திரிசாரண அமைப்பினரின் ஏற்பாட்டில் முல்லை வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆதரவுடன் சாரணிய மாணவர்களுக்கான முன்னோடிக் கம்போறி நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றங்கரையில் முல்லை மாவட்ட சாரணியஉதவி ஆணையாளர் வே.ஜேம் சபாதி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்தக்கம் போறியில் 18 பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். முதல்பயிற்சியாக கட்டுமரம் வலித்தல் பயிற்சியினை முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் மற்றும் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர் தொடர்ந்து நீச்சல் பயிற்சி இடம்பெற்றது. இதில் பெருமளவான சாரணிய மாணவர்கள் கலந்துகொண்டனர்.இப்பயிற்சி நெறி மூன்று நாட்கள் தொடர்ந்து இடம் பெறவுள்ளது. (20)

## மதுபான....

மதுபானப் போத்தல்கள் சேதமாகியுள்ளதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர். காயங்களுக்குள்ளான விற்பனையாளர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

## சீனன்....

என இராணுவத்தரப்பு தெரிவிக்கின்றது. இவர் பிரித்தானிய பிரஜா உரிமை பெற்றவராவார். இவரின் வீடியோக் கமராவில் சீனன் குடா விமானப் படை முகாம், சீனன் குடா கோவில், இன்னும் சில இடங் கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதுபற்றி ஆரம்ப விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## யு.நி.உடன்...

அவர் அளித்த பேட்டியில்,

**கேள்வி: இன்றைய சந்திப்புத் தொடர்பாக?**

பதில்: தற்போது தாயகப் பிரதேசத்தில் நிலவும் குழப்பகரமான நிலைமைகள் தொடர்பாகவும், யுத்த நிறுத்த நடைமுறைகள் ஒரு நெருக்கடி நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கும் நிலைமைகள் பற்றியும் கலந்துரையாடியுள்ளோம்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம். முக்கியமாக யுத்த நிறுத்த உடன்பாடு அமுல்படுத்துவது தொடர்பான கருத்துக்கள்தான் பரிமாறப்பட்டன.

**கேள்வி: யுத்த நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் சில சரத்துக்கள் தொடர்பாக புதிய நடைமுறைகள் கையாள்வது தொடர்பாக இன்று ஆராயப்பட்டதா?**

பதில் : யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதுதான் முக்கியமானது. அந்த நடைமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு புதிய நடைமுறைகள் தொடர்பாக சிந்திக்க முடியாதவர்களாக உள்ளோம்.

ஏற்கனவே, மூன்றரை ஆண்டு கால யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி தான் யுத்த நிறுத்த சூழலும், சமாதான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுற்படுத்த இரண்டு தரப்புக்கும் கடப்பாடு இருக்கின்றது.

கண்காணிப்புக்குழுவிற்கு யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பேண வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஏற்கனவே, மிகுந்த முயற்சிக்கு மத்தியில் ஏற்பட்ட உடன்பாட்டை செம்மையாகப் பேணுவது பற்றி இன்று கலந்துரையாடப்பட்டது.

**கேள்வி: அமுலில் உள்ள போர் நிறுத்த ஒப்பந்த சரத்துக்கள் அல்லது ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வது தொடர்பாக அரச தரப்பில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. அது தொடர்பாக இன்று கலந்துரையாடினீர்களா?**

பதில் : இவை தவறாக உள்ளன. நோர்வே வெளியுறவு அமைச்சர்கள் எமது தலைவருக்கு சில செய்திகளை அனுப்பியுள்ளனர். யுத்த நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு இரு தரப்பும் கலந்துரையாடப்பட வேண்டும் என்பது யோசனையாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக எமது தலைமைப்பீடம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. ஓரிரு நாட்களுக்குள் எமது முடிவுகளை நோர்வேக்கு அறிவிக்கவுள்ளோம்.

**கேள்வி: யாழ்ப்பாண நிலைமைகள் பற்றி கலந்துரையாடப் பட்டதா?**

பதில் : யாழ்ப்பாண நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. அண்மையில் எமது போராளி ஒருவர் நேற்று பலவந்தமாகக் கடத்தப்பட்டுள்ளார். போர் நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் போராளி தனது வீட்டிற்கு சென்றுள்ளார். மிக முக்கியமாக அவர் உடல் நிலை பாதிக்கப்பட்டவர். அதாவது, ஒரு கையை முழுமையாக இழந்தவர். வயிறு, கால்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. இவர் பலவந்தமாக கடத்தப்பட்டுள்ளார். இது பாரிய யுத்த நிறுத்த மீறல் என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம். உடனடியாக தீர்வு காணப்படவேண்டும். இல்லாதுவிட்டால் தீர்க்கமான முடிவை எடுப்போம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

இந்தச் செயல்கள் மூலம் புலிகளைச் சீண்டி மீண்டும் போர்ச் சூழலுக்குள் தள்ளும் ஒரு போக்கின் வெளிப்பாடாகவே நாம் இதைப் பார்க்கின்றோம் என்பதையும் இன்றைய சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

**கேள்வி : அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி பல்வேறு இடங்களில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. பொதுமக்கள் மட்டுமல்ல, போராளிகளும் கைது செய்யப்படுகின்றனர். இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளீர்களா?**

பதில்: யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்புக்கும் கடப்பாடுகள் உள்ளன. அதாவது, தமிழர் தாயகப் பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளாக இருக்கலாம். விடுமுறையில் செல்லும் போராளிகளாக இருக்கலாம் இந்தப் போராளிகளுக்கு சிறப்பு உரிமைகள் இருக்கின்றன.

அதன் அடிப்படையில்தான் போக்குவரத்தையும் செய்கின்றார்கள். அரசியல் பணியும் செய்கின்றார்கள். இந்தப் பணிகளுக்கு இடையூறு விளைவித்தால் யுத்த நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து பேணுவது சிரமமாக இருக்கும்.

போராளிகள் அரசியல் பணிகளில் ஈடுபட வெளியே செல்ல முடியாத நிலையுள்ளன. இது ஒரு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும். இந்த அவசரகாலச்சட்டம் என்பது தமது பகுதிகளுக்குள்ளே கடைப்பிடிக்க வேண்டியவையாக இருந்தாலும், எமது நடவடிக்கைகளை யுத்த நிறுத்த உடன்பாட்டு நடைமுறைக்கேற்ப இடம்பெறாமைக்கு குறுக்கீடாக இருந்தால் கேள்விக்குறியாக மாறிவிடும். இப்போது எமது போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது அத்துமீறலும், யுத்த நிறுத்த மீறலும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**கேள்வி: அவசரகாலச் சட்டத்தின் வர்த்தமானிப் பிரதிகளை மக்களுக்கு காட்டியே சோதனை நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொள்கின்றனர். இது போர் நிறுத்தத்தை ஆரோக்கியமாக எவ்வளவு தூரத்திற்கு வைத்திருக்க உதவும்?**

பதில் : இந்த ஆபத்தான நிலைமைகள் தொடர்பாகவும் சுட்டிகாட்டியுள்ளோம். எமது மக்கள் மீது இவ்வாறான கெடுபிடிகளை, நெருக்கடிகளை ஏற்படுத்துவது எமது போராளிகள் மீதான அத்துமீறல்கள் இடம்பெறுவதும் யுத்த நிறுத்த சூழலைப் பாதிக்கும் என்பதை விரிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

**கேள்வி : போராளிகளின் பாதுகாப்பான பயணம் தொடர்பாக கலந்துரையாடப் பட்டதா?**

பதில் : போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். முழுமையாக அல்ல. அதாவது, முதற்கட்டமாக போராளிகளின் போக்குவரத்துக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சில ஒழுங்கு முறைகளைத் தந்துள்ளார்கள். அம்பாறை, மட்டக்களப்புக்கு போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஒரு மாத காலத்துக்குள் தீர்வு காண்பதாகக் கூறியிருப்பதால் அடுத்த கட்டமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த கண் காணிப்புக்குழுத்தலைவர் தலைமையிலான குழுவினர் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்ருடனான சந்திப்பை காலை 11.00 மணியளவில் மேற்கொண்டனர்.

இதில் விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கலந்து கொண்டனர். (கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.